## *சங்க இலக்கியத் தத்துவங்கள்*

*எஸ். குமரன்*
*இந்திய ஆய்வியல் துறை, மலாயாப் பல்கலைக்கழகம்*

### *அறிமுகம்*

*சங்கப் புலவர்கள் என்போர் மிகப் பலராவர். அவர்கள் அனைவரும் பாடிய பாடல்கள் இன்று இல்லை. சில புலவர்களின் பாடல்களே இன்று நம்மிடை உள்ளன. இவர்கள் வாழ்ந்த காலம் முச்சங்கங்கள் நடைபெற்ற காலமாகும். தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்னும் மூன்று சங்கங்களும் தமிழ் வளர்க்கும் பாணியில் எண்ணிறந்த பாடல்களையும் நூல்களையும் உருவாக்கின. பொதுவாக, சங்க காலம் என்றால் தலைச்சங்கம் காலத்தின் தொடக்கம் முதல் கடைச்சங்க காலத்தின் இறுதி வரைகுறிக்கும். அத்தொடக்கமும் இறுதியும் யாவை என்பதைக் கட்டுரைக்க இயலவில்லை. ஆயினும், தலைச்சங்க காலத்தவராகிய தொல்காப்பியர் காலம் முதல் இளங்கோவும், சாத்தனாரும் வாழ்ந்த காலமாகிய கி.பி.2-ஆம் நூற்றாண்டு வரை சங்க காலம் என்று கொள்ளலாகும்.*

*சங்க காலப் புலவர்கள் பாடிய பாடல்களும் நூல்களும் சமுதாய நிலையைத் தெளிவுபடுத்துவதோடு, சமுதாய முன்னேற்றத்துக்கான நெறிகளை வரையறுத்துக் கூறுவனவாகவும் அமைந்துள்ளன. இன்று நம்மிடையேயுள்ள நூல்களுள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்கள் சங்க காலத்து நூல்களாகப் போற்றப்படுகின்றன. இவற்றுள், பத்துப்பாட்டு, எட்டுத் தொகை நூல்களைப் பற்றிய தத்துவக் கருத்துகளில் சிலவற்றை இக்கட்டுரை ஆராய்கிறது.*

### *சங்ககாலப் பண்பு நிலை*

*சங்ககாலப் பண்புநெறி வாழ்க்கை, பண்டைத் தமிழரின் மரபுவழிப் பண்பினைக் கொண்டதாகும். எனவேதான், சங்ககால வாழ்க்கை முறையை இன்று பலரும் போற்றியுரைக்கின்றனர். சங்க காலத்தினின்று சில நூற்றாண்டுகட்குப் பின்னர், அஃதாவது, கி. பி. 7-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் சமயங்களின் சார்பாக வைதீக நெறி, பக்திநெறி ஆகியவை பரவின. இவ்வுண்மையைத் தேவாரக் காலத்துக்குப் பின்னர்த் தோன்றிய நூல்களால் உணர முடிகின்றது.*

*சங்ககாலம் எனப்படுகின்ற மிகப் பல ஆண்டுகளில் தோன்றிய பாடல்களிலும் நூல்களிலும் வைதீக நெறி என்றோ பக்தி நெறி என்றோ தனி நெறிகள் காணப்படவில்லை. மக்கள் அனைவரும் பொதுவாக தெய்வ நம்பிக்கையில் வாழ்ந்தனர் என்றும் தெய்வத்தின் பெயரால் பொருந்தாக் கொள்கைகளைப் புகன்று மக்களை மயக்கிய மதவாதிகள் இருக்கவில்லை என்றும் உணர முடிகின்றது.*

*அக்காலத்துப் பாடல்களும் நூல்களும் மக்கள் இவ்வுலகில் வாழவேண்டிய நெறிமுறைகளையே விதந்துரைகின்றன. அவையனைத்தும் உலகவாழ்வைப் பொய் என்றோ மாயம் என்றோ நிலையற்றது என்றோ வலியுறுத்தவில்லை. மாறாக, இல்லற வாழ்க்கை எங்ஙனம் நடைபெறல் வேண்டும்; சமுதாய வாழ்வு எவ்வாறு அமைய வேண்டும்; அரசியல் எவ்வாறு நடைபெறல் வேண்டும்; நல்லொழுக்கங்கள் யாவை; கணவன் கடமை, மனைவியின் கடமை, அரசனின் கடமை, அமைச்சர்களின் கடமை, போர்முறை முதலிய பல உண்மைக் கொள்கைகளையே வலியுறுத்துகின்றன.*

*இக்கொள்கைகளையெல்லாம் உள்வைத்து அறம் கூறும் பாடல்களாகப் பாடிச் சென்றுள்ளனர். அவர்கள் கூறும் அவ்வறங்கள் அனைத்தும், மக்களை வேறுபடுத்தி உயர்ந்தார்க்கு இன்ன அறம், தாழ்ந்தார்க்கு இன்ன அறம் என்று வேறுபட்ட நிலையில் அமையவில்லை. அனைவர்க்கும் பொதுவானவையாக அவ்வறங்கள் அமைந்துள்ளன. இவ்வாறு அமைந்த அவ்வறப் பாடல்களில் இடையிடையே சிற்சில தத்துவக் கருத்துகளும் இடம்பெற்றுள்ளன.*

*சங்கப் புலவர்கள் தாம் வலியுறுத்தும் கொள்கை எதுவாயினும், அஃது உலகம் முழுமைக்கும் ஒத்த வகையிலேயே உரைத்து உயர்வு கொண்டுள்ளனர். சங்க காலச் சமுதாயத்தில் சாதியோ மதமோ இனமோ அவை பற்றிய பற்றோ காணப்படவில்லை. மனிதப்பற்று ஒன்று மட்டும் மேலோங்கிக் காட்சியாகின்றது. இத்தகைய விழுப்பத்தையே சங்கப் பாடல்கள் உணர்த்துகின்றன.*

***உலகம்***

*புறநானூற்றுப் புலவர் முடிநாகராயர் உலகம் பற்றிய தத்துவத்தை உணர்த்தியுள்ளார். இவர் இத்தத்துவத்தைக் கண்டு மொழிதற்குத் துணைசெய்தது தொல்காப்பியரின் உலகம் பற்றிய தத்துவம். தொல்காப்பியரின் தத்துவத்தை வைத்து ஆராய்ச்சி புரிந்து அழகான உண்மையைக் கண்டு வெளிப்படுத்தியுள்ளார்.*

*மண்திணிந்து நிலனும்*
*நிலன்ஏந்திய விசும்பும்*
*விசும்புதைவரு வளியும்*
*தீ முரணிய நீரும் என்றாங்கு*
*ஐம்பெரும் பூதத்து இயற்கை போலப்*

*போற்றார்ப் பொறுத்தலும் சூழ்ச்சிய தகலமும்*
*வலியும் தெறலும் அளியும் உடையோய் (புறம். 2)*

*விசும்பின் அகலத்தன்மையும் வளியின் வலிமைத்தன்மையும் தீயின் அழிக்கும் தன்மையும் நீரின் கருணை-அளித்தன்மையையும் நிலத்தின் பொறுமை-தாங்கும் தன்மையையும் கூர்ந்து நோக்கி உணர்ந்துள்ளார் புலவர் நாகராயர்.*

*ஐம்பெறும் பூதங்களின் தோற்ற முறை பற்றிய இவர் தத்துவம், விஞ்ஞானத்தின்பாற்பட்டத் தத்துவமாகவும் உள்ளது. உலகவழக்கில் பொதுவாக 'உலகம்' என்றால், இந்நிலப்பகுதியை மட்டுமே உணர்த்துவதாகக் கொள்ளப்பெறுகின்றது. ஆனால், தத்துவமுறைப்படி ஐம்பூதங்ளின் கலவையினையே உணர்த்துவதாகும்.*

***உயிர்***

*கணியன் பூங்குற்றனார் என்னும் சங்ககாலப் புலவர் உயிர் பற்றிய தத்துவத்தைக் கூர்ந்து நோக்கிக் கூறியுள்ளார். அவர் கூறும்முறை, தத்துவத்திற்கு நல்ல விளக்கத்தையும் சிறப்பையும் வழங்கித் திகழ்கின்றது.*

*.............. மின்னொடு*
*வானம் தண்துளி தலைஇ ஆனாது*
*கல்பொருது இரங்கும் மல்லல்போர் யாற்று*
*நீர்வழிப் படூஉம் புணைபோல், ஆர்உயிர்*
*முறைவழிப் படூஉம் என்பது, திறவோர்*
*காட்சியில் தெளிந்தனம் (புறம். 192)*

*மின்னுகின்ற மேகம் குளிர்ந்த மழையைப் பெய்கின்றது. அம்மழை நீர் எப்பொழுதும் கல்லில் மோதி ஒலித்துக்கொண்டு பாய்வதால், ஓடுகின்ற நீர் வளம் பொருந்திய வழியே ஓடிக்கொண்டிருக்கின்றது. இதனை, பூங்குன்றனார் உயிரின் தத்துவத்தை விளக்க உவமையாகக் கொண்டுள்ளார்.*

*உடம்பில் வந்தடைந்த உயிர், உடம்பு செய்யும் வினைகேற்ப இன்பத்தையோ துன்பத்தையோ அனுபவித்துக்கொண்டே இருக்கும் என்னும் உண்மையைத் தெளிவுசெய்ய மேற்கண்ட உவமையை எடுத்தாண்டுள்ளார்.*

***நிலையாமை***

*நிலையாமைத் தத்துவத்தைச் சங்ககாலப் புலவர்களில் பலர் பல பாடல்களில் வலியுறுத்திச் சென்றுள்ளனர். ஈண்டு, அவற்றுள் இன்றை மட்டும் எடுத்து விளக்கலாம். மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்னும் புலவர் பெருமான், புறப்பொருள், அகப்பொருள் ஆகிய இருவகைப் பொருள் பற்றிய பாடல்களையும் பாடிச்சென்று உள்ளார். அவரது அகப்பொருள் பற்றிய பாடல்களில் ஒன்று குறுந்தொகை என்னும் நூலில் உள்ளது. அப்பாடலில் நிலையாமைத் தத்துவத்தை உணர்த்துகின்றார்.*

> *நில்லாமையே நிலையிற்று, ஆகலின்*
> *நல்இசை வேட்ட நயனுடைய செஞ்சின்*
> *கடப்பாட்டாளன் உடைப் பொருள் போலத்*
> *தகுதற்கு உரியது அன்று (குறுந். 143)*

*இவ்வடிகளைக் கொண்ட பாடல், குறிஞ்சித் திணை பற்றிய அகப்பொருள் பாடலாகும். தலைவன் பொருள் தேடும் நிமித்தம் தலைவியைப் பிரிந்து சென்றான். தலைவி அப்பிரிவை யாற்றாது பசலையுற்று வருந்தினாள். அதனைக் கண்ட தோழி, அவனது சிறப்பியல்பைக் கூறி ஆற்றும் முறையில் இப்பாடல் அமைந்துள்ளது.*

*'ஆயிழையே! அவன், நமது இளமைப் பருவமும் யாக்கையும் நினைத்தவையல்ல; நம்முடைய செல்வமும், வாழ்வும் சிதையாமல் என்றும் நிலையாக உள்ளவையல்ல; உலகில் என்றும் நிலையாக நிற்பது புகழ் ஒன்றுதான் என்னும் உண்மையை நன்கு உணர்ந்தவன்'. ஆகையால், 'அவன் நெறிமுறை தவறாமல் நடந்து கொள்ளும் உத்தம குணம் படைத்தவன். இவ்வுண்மையை உணர்ந்தவர் எவராயினும், அவர், நமது பொருளை நல்வழியில்தான் செலவழிப்பார்; வறுமையால் வாடி வருந்தும் ஏழைகட்கு இரங்காமல்-உதவி செய்யாமல் இருக்க மாட்டார். இத்தகைய குணம் உடையவரின் செல்வம் அவரிடமே நிலைத்திருப்பதில்லை. அவரை விட்டுப் பிரிந்துதான் செல்லும். அதுபோல், உன் உடம்பில் தோன்றிய பசலையும் நீங்கிவிடும். வருந்த வேண்டாம்' என்று கூறியதாகப் பாடல் அமைந்துள்ளது. 'நிலையாமையே நிலையிற்று' என்னும் பகுதியே நிலையாமை தத்துவத்தை உணர்த்துகின்றது. அதற்கு எடுத்துக்காட்டாக, 'கடப்பாட்டாளன் உடை பொருள்' அமைந்தது. இவ்வாறு அகத்துறுறைப் பாடலிலும் தத்துவம், அறநெறி, பண்பு நெறி ஆகியவற்றை உள்வைத்துப் பெருமை கொண்ட புலவராக நக்கீரனார் விளங்குகின்றார்.*

***பண்பு நெறித் தத்துவம்***

*'பண்பு' என்பது நடைமுறைத்தமை என்று பொதுவாகப் பொருள்படும். நடைமுறை என்பது உலகின் நடைமுறை, தனி மனிதனின் நடைமுறை என இரு வகையில் அடங்கும். தனிமனிதனின் நடைமுறை, உலக நடைமுறையோடு ஒத்திருத்தல் வேண்டும் என்பது தத்துவமேதைகளின் துணிபு. உலகில் உள்ள எல்லா உயிர்கட்கும் 'பண்பு' என்பது உண்டு. பண்டைய சான்றோர்கள்*

*உயிர்களின் பண்பைப் பிரிக்குங்கால், மனிதப் பண்பு, விலங்குப் பண்பு என வகைப்படுத்தினர். பண்பு என்பது தன்மை, இயல்பு என்னும் பொருள்களைக் குறிப்பதால், மனிதப் பண்பை, 'விலங்கியல்பு' என்றும் மொழிந்தனர்.*

*மனிதனுடைய வாழ்வில் பயின்றுவரும் செயல்கள் அனைத்திலும் மனிதனது பண்பு வெளிப்படுகின்றது. இதனைப் பொதுவாக வாழ்க்கைப் பண்பு என்று கூறப்பெறும். இழ்வாழ்க்கைப் பண்பினை நல்லந்துவனார் என்னும் சங்கப் புலவர் ஒன்பது வகையாகப் பகுத்து, அவற்றின் நெறி முறையினையும் மொழிந்துள்ளார். அவை: ஆற்றுதல், போற்றுதல், பண்பு, அன்பு, அறிவு, செறிவு, நிறை, முறை, பொறை என்பவையகும்.*

*ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்குதவுதல்*
*போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை*
*பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்*
*அன்பெனப் படுவது தன்கிளை செருஅமை*
*அறிவெனப் படுவது பேதையார் சொல் நோன்றல்*
*செறிவெனப் படுவது கூறியது மருஅமை*
*நிறையெனப் படுவது மறிபிறர் அறியாமை*
*முறியெனப் படுவது கண்ணோடாது உயிர்வெளவல்*
*பொறியெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல் (கலித்தொகை)*

*இப்பண்பு நெறித் தத்துவங்களைச் சங்ககாலத்து மக்கள் மனத்துள் கொண்டு மாண்புடன் வாழ்ந்து இன்புற்றுள்ளனர். இதனைத் தெளிவுசெய்யும் பாடல்கள் பல உள்ளன.*

*யாண்டுபல ஆக நரைஇல ஆகுதல்*
*யாங்காகிய ரெனவினசுதி ராயின்*
*மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்*
*யான்கண் டனையர்என் இளையரும் வேந்தனும்*
*அல்லவை செய்யான் காக்கும் அதன்றலை*
*ஆன்றவிந் தடங்கி கொள்கைச்*
*சான்றோர் பலர்யான் வாழும் ஊரே (புறம்.191)*

*இப்பாடல், பிசிராந்தையர் என்னும் புலவர் பாடியது. இவை போன்று மேலும் பல பாடல்கள் சங்ககாலத்து மக்களின் பண்புநெறி வாழ்க்கையினைத் தெளிவுசெய்வனவாக உள்ளன.*

## அரசியல் தத்துவம்

*மிக மிகப் பழங்காலந்தொட்டு இன்று வரை மக்களிடையே நில்லாதனவற்றை நிலையானவை என்று கருதி, அவற்றின் காரணமாகப் பேராசையும் பொறாமையும் வஞ்சகமும் கொடுமைகளும் கொலையும் களவும் சூதும் இருந்து வருகின்றன. அப்பழங்காலத்து மக்களின் நிலை அவ்வாறு இருந்தமையால், வாழ்க்கை மிகவும் துன்பமுடையதாக இருந்தது. மக்களின் துன்பத்தைப் போக்கி இன்பமாக வாழச் செய்யவும் மக்களிடையில் நிலவிய பொருந்தாப் பண்புகளையும் கொடுமைகளையும் போக்கி, நன்னெறியில் வாழச் செய்யவும் ஒரு பாதுகாப்பு அமைப்புத் தேவையாக இருந்தது. அப்பாதுகாப்பு அமைப்புதான் அரசாட்சி.*

*அரசியல் தோன்றியதன் தத்துவம் அதுவேயாம். அத்தத்துவத்தை அரசியலார் நடைமுறியில்- ஆட்சி முறியில் செயல்படுத்துங்கால், இன்னார் இன்னார் என்று வேறுபாடு கருதாமலும் நமது நண்பர், உறவினர் என்ற முறையினைக் கொள்ளாமலும், நடுநிலையின் நின்று குறைகளையும்*

*வகையில் முறைசெய்து, மக்களைக் காத்தலும் மக்கள் வாழ்க்கையில் நன்னெறி ஓங்கச் செய்தலும் கடமையாம். இத்தகைய கடமையுடனும் மேற்கூறிய காரணத்தோடும் தோன்றிய அரசியல் முறை என்று தோன்றியிருக்கக்கூடும் என்று மனதாலும் கருதவியலவில்லை. மிகமிகப் பழங்காலத்தில்தான் தோன்றியிருக்க வேண்டும்.*

*துன்பம் களைந்து இன்பம் செய்தலும் குறை களைந்து நன்னெறி செலுத்துதலுமாகிய தத்துவம் அறத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். மக்களிடையே அறவாழ்க்கையைத் தோற்றுவித்து, மறவாழ்க்கையைப் புறக்கணிக்கச் செய்வதே அரசியலின் தத்துவவிழுப்பம். இவ்வறப்பணியை அரசியலில் செயல்படுத்துங்கால் நடுநின்று முறைசெய்யும் கடமையும் அறத்தின்பாற்பட்டதாகும். சுருங்கச் சொன்னால், அரசியல் என்பது தத்துவ அறத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது என்பதாம். அறத்துக்காக அரசியல். அறமே அரசியல் எனவாகும். அறநெறியில்-அறத்தில் வழுவினால் அரசு குலைந்துவிடுதல் உண்மை. அரசியல் புரியும் அனைத்துச் செயல்களும் அறத்தின்பாற்பட்டவையாகும். அரசின் வெற்றிக்கு அறமே முதற் காரணம். அவ்வெற்றி அறத்தின் வெற்றியேயாம்.*

*அறநெறிப்பட்ட அரசியல் தத்துவத்தை மருதன் இளநாகனார் என்னும் புலவர் ஒரு பாடலில் அழகாக மொழிந்துள்ளார்.*

*அறநெறி முதற்றே அரசின் கொற்றம்*
*அதனால் நமர்எனக் கோல்கோ டாது*
*பிறர்எனக் குணம் கொல்லாது*
*ஞாயிற்று அன்ன வெம்திறல் ஆண்மையும்*
*திங்கள் அன்ன தண்பெரு சாயலும்*
*வானத் தன்ன உண்மையும் மூன்றும்*
*உடைய யாகி இல்லோர் கையற*
*நீ நீடு வாழிய!   (புறம்.55)*

*இவ்வடிகளில் அரசியல் தத்துவத்தை முறைமை, ஆண்மை, இனிமை, வள்ளன்மை என்னும் நால்வகையில் வகுத்து மொழியப் பெற்றுள்ளது. 'முறை' என்பது அறநெறி வழுவா நீதி முறை என்பதாகும். 'ஆண்மை' என்பது அரசியலில் படைபலம் முதலிய வலிமையை உணர்த்தியது. 'இனிமை' குடிமக்களுக்குக் குறை போக்கி இனிய வாழ்வையளித்தல் என்பதாகும். 'வள்ளன்மை' என்பது வறியவரின் வறுமையைப் போக்கி வளம் பெருகச் செய்வதாகும்.*

*கதிரவன், சந்திரன், மேகம் என்னும் மூன்றும் எடுத்துக்காட்டுகளாக அமைத்து, முறையே இணையற்ற ஆண்மை, இனிமை, வள்ளன்மை என்னும் மூன்றையும் தெளிவுபடுத்துகின்றன. முறைமை, ஆண்மை, இனிமை, வள்ளன்மை என்னும் நான்கன் வகையில் அமைந்த அறமுறையே அரசின் வெற்றிக்கு வழி வகுக்கும். அறமுறையில் வழுவின அரசின் அழிவுக்கு வழி பிறக்கும் என்னும் தத்துவம் தெளிவாக்கப்பட்டுள்ளது.*

**தவநெறித் தத்துவம்**

*உலகில் மன அமைதியுடன், கவலையின்றி வாழ்கின்றவர்கள் சிலரேயாவார். அவர்கள் தமக்கென்று அவாவின்றி, பிறர் நலத்திற்காக வேத-மத வாழ்கையை அர்ப்பணித்தவர்களாவர். அவர்கள், ஒருபோதும் சோம்பிக் கிடக்காமல் பிற உயிர்நலம் பேணும் நெறியில் ஒழுகுவார்கள். அவர்களை மக்கள் மிகவும் மரியாதையும் கொண்டு போற்றுவார்கள். அவர்களே துறவிகள்-தபசிகள்-முனிவர்கள்-ஞானிகள் என்று அழைக்கப்படுவர்.*

*துறவிகள்-தபசிகள் என்போர், நல்லொழுக்கம் உள்ளவர்களாகவும் தந்நலப்பற்று அற்றவர்களாகவும் பொதுநலம் பேணுபவர்களாகவும் உலக உயிர்களின் நலத்திற்குத் தமது*

வாழ்க்கையை ஒதுக்கியவர்களாகவும் ஒழுக வேண்டும் என்பது பண்டைய தவநெறித் தத்துவமாகும். நல்லொழுக்கம் உடைமையும் தன்னலமின்மையும் பொதுநலவிழியில் மன்னுயிர் ஓம்பலும் இணைந்து அமைந்தது தவநெறித் தத்துவம்.

தவநெறித் தத்துவத்தைக் கண்டறிந்த சான்றோர்கள், அந்நெறி வாழ்வினர்க்கும் மற்ற மக்களுக்கும் வேறுபாடு தெரியப்படல் வேண்டும். மற்ற மக்கள் அவர்களைப் புரிந்துகொள்ள வேண்டும் என்னும் காரணத்திற்காக, தவநெறியில் நிறோர்க்கு அடையாளமாக சில ஆடைகளையும் வகுத்தனர். அவற்றைப் பிறர் விரும்பாத வகையிலும் பிறர் அணியக் கூடாது என்ற வகையிலும் வகுத்தனர். தவநெறிச் சான்றோர்களும் அவ்வாடைகளைப் பூண்டு தவவேடத்தில் காட்சியளித்துள்ளனர்.

தவவேடம் தாங்கியோர் யாவராயினும் அவர்க்கு மக்கள் மரியாதை செய்வது பண்பட்ட பழக்கமாகும். அம்மரியாதை காரணமாக மக்கள் அத்தவநெறியினரைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இருந்தது. இதன் பொருட்டே அவர்கட்குத் தனியாடை அணிகள் தோன்றலாயின.

பண்டைக்காலத்து, மக்களின் உள்ளத்தை உணர்வதற்கு, தவநெறியினரின் மாசற்ற பண்பைக் காட்டுவதற்கு வெளிக்கோலத்தையும் கருவியாகக் கொண்டிருந்தனர். ஆகையால், தவநெறியினர் தாங்கியிருந்த வேடம், இக்காலத்தில் உள்ள பல துறவிகளின் வேடத்தைப் போல் பொய் வேடமோ போலி வேடமோ பிறரை வஞ்சிக்கும் வேடமோ அன்று. சங்க காலத்துத் தவநெறிச் சான்றோரின் நிலையை, புலவர் நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் தெளிவாக உணர்த்தியுள்ளார்.

சீரை தைஇய உடிக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்பு எழுந்து இயங்கும் யாக்கையர் நன்பகல்
பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம்பு ஆகிய தலைமையர் காமமொடு
கடும்சினம் கடிந்த காட்சியர் இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவார்

முனிவர்கள் மரவுரியை ஆடையாக உடுத்தியிருப்பர்; நரைத்த முடியை வலம்புரிச் சங்குபோல் உயர்ந்து நிற்குமாறு முடிந்திருப்பர்; முக்காலமும் குளித்து முழுகியதால் தூய உடம்புடன் காட்சியளிப்பர்; மான் தோலை அணிந்திருப்பர்; பல நாட்கள் விரதம் என்னும் பெயரால் உணவின்றி வாழ்வதால், மார்பின் எலும்பை எண்ணிக் கணக்கிடும் அளவிற்கு உடல் மிக மெலிந்திருப்பர்; உள்ளத்தில் பகையும், சினமும் இல்லாமல் இருப்பர்; எல்லாவற்றையும் கற்றவரிகளும் அறியாத உண்மையை உணர்ந்தவராக இருப்பர்; கற்றவர்கட்கெல்லாம் ஓர் எல்லையாக நிற்பர்; காமத்தையும் கொடிய சினத்தையும் துறந்திருப்பர்; சிறந்த ஞானம் கொண்டிருப்பர்; எவ்வுயிர்க்கும் எத்துணையும் தீமை செய்யாத இயல்போடிருப்பர்; மேலும் மேலும் வளர்கின்ற மாசற்ற அறிவினோடிருப்பர் என்று இவ்வடிகள் உணர்த்துகின்றன. இவ்வடிகள் பண்டைய முனிவர்களின் நோற்றத்தையும் இயல்பையும் சிறப்பையும் தெளிவாக உணர்த்துவனவாயினும் தவநெறியுண்மை நிலை இன்னதுதான் என்பதையும் அறிவிக்கின்றது.

இதுகாறும், சங்க இலக்கியப் பாடல்களில் புலவர்கள் சிலர் பாடிய அறப்பாடல்களுள் - நீதிமுறைப் பாடல்களுள் பொதிந்து கிடக்கும் சில தத்துவங்களை எடுத்து விளக்கப்பெற்றன. இவை போன்று மேலும் பல தத்துவங்களை உணர்த்தும் அறப்பாடல்களும் உள்ளன. தத்துவம்

பொதிந்த தமிழ்ப் பாடல்கள் இயற்றிய சங்ககாலத்துப் புலவர்கள் அனைவரும் தத்துவ மேதைகள் எனலாகுமன்றோ?

**மேற்கோள்கள்**

குறுந்தொகை
அகநானூறு
புறநானூறு
கலித்தொகை
திருமுருகாற்றுப்படை